**Previous Examination date – 25.06.2025**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 129 of 2021**

**Deposition of Witness P.W.10**

| | |
|---|---|
| **Name : குணசுந்தரி** | **Father/Husband's Name : சந்திரன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 02.03.2026.**

**A1, A3 present. A2 died.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் பெண்களுக்கு எதிரான குற்ற தடுப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் கடந்த 18.03.2021ம் தேதி பழனி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக இருந்தபோது அந்நிலைய தலைமை காவலர் 229 என்பவரால் பதிவு செய்யப்பட்ட மனு எண்.91/2020 ஐ பார்வையிட்டு நிலைய சார்பு ஆய்வாளர் திருமதி.சண்முகசுந்தரி அவர்களால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை எண்.6/2021, பிரிவு 498(A),294(b),406,506(1) இ.த.ச. மற்றும் 4 of TNPHW Act-ன் கீழான வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு இந்த வழக்கின் சாட்சிகளான விஜயசாந்தி, முத்தாலம்மாள், கருப்பையா, முருகு(எ)முருகேஸ்வரி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், சம்பவயிடத்தை பார்வையிட்டும் பின்பு எதிரியை தேடி வந்தபோது இவ்வழக்கில் 1ம் எதிரியான செல்லப்பாண்டி என்பவரை நிலக்கோட்டை பஸ் ஸ்டாப்பில் வைத்து அன்றே 12.30 மணிக்கு காரணம் கூறி கைது செய்து 14.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பின்பு 20.03.2021ம் தேதி சாட்சிகளான ராஜலட்சுமி, சுருளியப்பன் மற்றும் முகமது ஹனிபா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் பணியிட மாறுதலில் சென்றதால் விசாரணை கோப்பினை மேல் விசாரைணைக்காக காவல் ஆய்வாளர் திருமதி.கவிதாவிடம் ஒப்படைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

**2. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.**

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.03.02 17:56:38 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**